DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : பத்திரகாளி | Father/Husband Name : கார்த்திக்சங்கர் |
| Age : 44 | Village : சாத்தூர் |
| Taluk : | Calling : கூலிவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Oct 13, 2025 12:48 PM

(Accused Present)

<u>**முதல் விசாரணை :–**</u>

1. சாத்தூரில் உள்ள நான்கு வழிச்சாலைக்கு மேற்கு பக்கம் எங்களுடைய வீடு இருக்கிறது. அங்கு நாங்கள் குடியிருந்து, நான் கூலி வேலை செய்து வருகிறேன்.

2. இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன கருப்பசாமி எனது அப்பா ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் தான் எனது அப்பாவின் இறப்பிற்கு காரணமான விபத்தினை ஏற்படுத்திய நபர். எனது அப்பா சாத்தூர் மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள முருகன் டீக்கடையில் மாஸ்டராக வேலை செய்து வந்தார்.

3. கடந்த 29.05.2019 ம் தேதி இரவு 11.00 மணிக்கு வேலை முடித்து வந்த எனது அப்பாவுடன் நானும், எனது கணவர் கார்த்திக்சங்கர் ஆகிய இருவரும் சாத்தூர் பைபாஸில் இருக்கும் நான்கு வழிச்சாலையில், பழைய படந்தால் சாலை அருகே எங்களுடைய வீட்டிற்கு பேசிக்கொண்டு நடந்து சென்று கொண்டிருந்தபோது வடக்கே இருந்து தெற்கு பார்த்து நான்கு வழி சாலையில் எதிரி அவருடைய காரை பயங்கர வேகமாக ஓட்டி வந்தார். எதிரி ஓட்டி வந்த வெள்ளை நிற வாகனத்தின் பதிவு எண் TN 72 BF 5580 ஆகும். என்னுடைய அப்பா எங்களுக்கு முன்பாக இரண்டு அடி சென்று கொண்டிருந்தார். என்னுடைய அப்பா நான்கு வழி சாலையில் சாலையை கடப்பதற்காக சென்றபோது அவர் மீது எதிரி ஓட்டி வந்த வாகனம் மோதி விட்டது. அந்த வாகனம் நிற்காமல் சென்றுவிட்டது. வண்டி மோதிய வேகத்தில் என்னுடைய அப்பாவை சற்று தொலைவில் தூக்கி போட்டது. அருகில் உள்ளவர்களும் வந்து விட்டார்கள். என்னுடைய அப்பாவிற்கு தலை, கால் மற்றும் கை போன்ற இடங்களில் ரத்தக்காயம் ஏற்பட்டிருந்தது.

4. மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார் காப்பாற்றி விடலாம் என்று அருகில் உள்ளவர்கள் கூறினார்கள். உடனடியாக அவசர ஊர்தி வாகனத்திற்கு ஃபோன் செய்து கூறினார்கள், தனியார் அவசர ஊர்தி வாகனத்தில் வந்தவர் என்னுடைய அப்பாவை பரிசோதனை செய்துவிட்டு என்னுடைய அப்பா இறந்து விட்டதாக கூறினார், அந்த வாகனத்திலேயே என்னுடைய அப்பாவை சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்துதான். அந்த புகாரை நான் காவல் நிலையத்தில் வைத்து என்னுடைய அப்பா இறப்பு தொடர்பாக கொடுத்தேன். (<u>**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**</u>) வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**</u>

5. நான் கூலிவேலை செய்து வருகிறேன். வழக்கு சம்பவம் நடைபெற்ற தேதியில் நாங்கள் எங்கு சென்று விட்டு வந்து கொண்டே இருந்தோம் என்றால் பூஜா ஜவுளி கடைக்கு சென்று விட்டு வந்து கொண்டிருந்தோம்.என்னுடைய புகார் மனுவில் நாங்கள் கோவில்பட்டியில் இருந்து வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், கோவில்பட்டியில் இருந்து வந்த பிறகு துணி எடுப்பதற்காக என்னுடைய அப்பாவை அழைத்துச் செல்ல வேண்டும் என்பதற்காக என்னுடைய அப்பாவை கூப்பிட வந்தேன். வழக்கமாக என்னுடைய அப்பா வேலையை முடித்துவிட்டு அவரே தனியாக வீட்டிற்கு வந்து விடுவார் என்றால் சரிதான், நாங்கள் துணி எடுப்பதற்காக வந்ததால் செல்லும்போது என்னுடைய அப்பாவையும் அழைத்து சென்றுவிடலாம் என்று அழைத்து சென்றோம்.

6. என்னுடைய அப்பா எங்கே குடியிருந்தார் என்றால் என்னுடைய வீட்டிற்கு அருகே சுமார் 10 வீடு தள்ளி குடியிருந்தார். நாங்கள் கோவில்பட்டியில் இருந்து எப்பொழுது வந்தோம் என்றால் அரசு பேருந்தில் இரவு சுமார் 9.00 மணி அளவில் சாத்தூருக்கு வந்து, ஜவுளி கடைக்குள் சென்றோம். கோவில்பட்டியில் இருந்து சாத்தூருக்கு பேருந்தில் வர சுமார் 45 நிமிடங்கள் ஆகும் என்றால் சரிதான். சாத்தூர் கிருஷ்ணன் கோவில் முக்கில் இருந்து என்னுடைய அப்பாவை பார்ப்பதற்காக நாங்கள் நடந்து தான் சென்றோம் என்றால் சரிதான். கிருஷ்ணன்கோவில் முக்கில் இருந்து பூஜா ஜவுளிக்கடை எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்றால் நான் பத்து நிமிடத்தில் நடந்து சென்று விடுவேன்.

7. நான் வேலையை முடித்துவிட்டு என்னுடைய அப்பாவை அழைத்துச் செல்லும்போது சுமார் 11.00 மணி இருக்குமா என்றால் 10.40 மணி இருக்கும். என்னுடைய அப்பா வேலை பார்த்த கடையிலிருந்து வழக்கு சம்பவம் நடைபெற்ற இடம் சுமார் 3 கிலோமீட்டர் தொலைவு இருக்கும் என்றால் நாங்கள் தெரு வழியாக என்னுடைய அப்பா வேலை செய்த இடத்தில் இருந்து சம்பவ இடத்திற்கு சுமார் 15 நிமிடத்தில் நடந்து சென்று விடுவோம். நாங்கள் எந்த தெரு வழியாக நடந்து சென்றோம் என்றால் தென்–வடல் தெரு வழியாக நடந்து சென்றோம். அது இந்த நீதிமன்றத்திற்கு பின்னால் இருக்கக்கூடிய தெரு என்றால் சரிதான்.

8. வழக்கு சம்பவ இடத்திற்கு போலீசார் உடனடியாக வந்து விட்டார்கள் என்றால் இல்லை, நாங்கள் சாத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்தபோது அங்கு ஒரு போலீசார் வந்தார். அந்த போலீசாரிடம் இந்த வழக்கு விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் எண்ணை கொடுத்தோம். அவர்தான் டோல்கேட்டிற்கு போன் செய்து அந்த எண் கொண்ட வண்டி வந்தால் பிடித்து வைக்குமாறு கூறினார். ஆகையால் உடனடியாக டோல்கேட்டில் வைத்து வாகனத்தை பிடித்து காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து விட்டார்கள். மருத்துவமனையில் வைத்து போலீசாரிடம் ஒரு புகார் கொடுத்தேன் என்றால் இல்லை, வாகனத்தில் எண் மட்டும் தான் கூறினேன்.

9. சம்பவம் நடைபெற்ற பிறகு அவசர ஊர்தி வாகனத்திற்கு யார் தகவல் கூறினார் என்றார் அங்கு இருந்த ஒரு அண்ணன் கூறினார். நாங்கள் சம்பவ இடத்திலிருந்து மருத்துவமனைக்கு இரவு சுமார் 11:30 மணிக்கு சென்றிருப்போம் என்றால் அதற்கு பிறகு தான் சென்றோம். புகாரை யார் எங்கு வைத்து எழுதியது என்றால் நான் கூறியதை ஒரு போலீசார் காவல் நிலையத்தில் வைத்து எழுதினார். போலீசார் என்னிடம் எனக்கு எழுத தெரியுமா என்று கேட்டார்கள் அந்த மனநிலையில் என்னால் எழுத

முடியாது என்று கூறியதால் நான் கூறியதை அவர்கள் புகாரியில் எழுதினார்கள். புகார் கொடுக்க யாரெல்லாம் சென்றோம் என்றால் நான், என்னுடைய கணவர் மற்றும் 5 நபர்கள் சென்றோம். நான் கொடுத்த புகாரில் என்னுடைய கணவர் சாட்சியாக கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். இந்த வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள புகார் மனு (அ.சா.ஆ.1) இந்த வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அது இந்த வழக்கில் நான் கொடுத்த புகார் அல்ல என்றால் சரியல்ல, நான் தான் அந்த புகாரை கொடுத்தேன். நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது எதிரி காவல் நிலையத்தில் தான் இருந்தார், அவருடைய முகத்தை மறக்க முடியாது.

10. பழைய படந்தால் சாலை என்பது சாத்தூரில் உள்ள கிருஷ்ணா மருத்துவமனையிலிருந்து மேற்கு நோக்கி சென்று, பின்பு வடக்கு நோக்கி செல்லக்கூடிய சாலை என்றால் சரிதான். எங்களுடைய வீட்டிற்கு சாத்தூரிலிருந்து செல்ல பிரதான வழி, வெம்பக்கோட்டை செல்லக்கூடிய சாலை வழியாக சென்று, தாயில்பட்டி விலக்கு சென்று தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். அதை தவிர வேறு பிரதான சாலை எதுவும் சாத்தூரிலிருந்து என்னுடைய வீட்டிற்கு செல்லக்கூடிய சாலை இல்லை என்றால் சரிதான்.

11. என்னுடைய அப்பா பழைய படந்தால் சாலையிலிருந்து நான்கு வழிச்சாலையை திடீரென்று கடக்கும் போது தான் விபத்து நடைபெற்றது என்றால் என்னுடைய அப்பா சாலையை கடக்கும்போது எப்போதும் மிகவும் கவனமாக தான் இருப்பார். வழக்கு சம்பவம் நடைபெற்ற நான்கு வழி சாலையில், நான்கு வழிச்சாலைக்கு கிழக்கு பக்கம் மற்றும் மேற்கு பக்கம் சர்வீஸ் ரோடு இருக்கிறது என்றாலும், நான்கு வழி சாலை வடக்கிலிருந்து தெற்கும், தெற்கிலிருந்து வடக்கும் செல்கிறது என்றாலும் சரிதான். வழக்கு சம்பவம் நான்கு வழிச்சாலையில் வடக்கில் இருந்து தெற்கு செல்லக்கூடிய சாலையின் மையத்தில் வைத்து நடைபெற்றது என்றால் சரிதான். நானும் என்னுடைய கணவரும் சர்வீஸ் சாலையில் இருந்தோம் என்றால் சரிதான். அந்த சர்வீஸ் சாலை அருகே நான்கு வழிச்சாலைக்குள் செல்லாமல் இருப்பதற்கு கம்பிகளால் ஆன தடுப்பு இருக்கிறது என்றால் இல்லை, அந்த தடுப்புகள் சாலையின் மேற்கு பக்கம் இருக்கிறது. அந்த தடுப்புகள் சாலையின் கிழக்கு பக்கத்திலும் இருக்கிறது என்றாலும், நான் வழக்கிற்காக இல்லை என்று கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

12. நாங்கள் நான்கு வழி சாலையை கடப்பதற்காக நான்கு வழிச்சாலையில் வைக்கப்பட்டிருந்த தடுப்பு கம்பிகளை வளைத்து அதன் வழியாக செல்வோம் என்றால் இல்லை. அந்த வழியாக நாங்கள் செல்ல முயற்சி செய்ததால் தான் இந்த வழக்கு விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. வாகனம் எவ்வளவு வேகத்தில் வந்தது என்று எனக்கு தெரியாது என்றால் பயங்கர வேகமாக வந்தது. இரவு நேரம் என்பதால் அது எவ்வளவு வேகத்தில் வந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான், ஆனால் பயங்கர வேகமாகும். என்னுடைய அப்பா தேசிய நெடுஞ்சாலையை கவனம் இல்லாமல் திடீரென கடந்ததால் தான் வழக்கு விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. என்னுடைய அப்பாவின் கவனக்குறைவு தான் வழக்கு விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல.

13. என்னுடைய அப்பா இறப்பு தொடர்பாக இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அதில் அதிகமான இழப்பீடு தொகை பெறுவதற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்தின் போது நான் சம்பவ

இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. இறந்து போன நபர் என்னுடைய அப்பா என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

14. போலீசார் என்னை விசாரிக்க போது என்னுடைய அப்பாவின் மீது வாகனம் மோதியதில் என்னுடைய அப்பாவை சற்று தொலைவில் தூக்கி போட்டது என்று கூறியுள்ளேனா என்றால் கூறினேன். அதேபோல், வழக்கு விபத்திற்கு பிறகு அருகில் உள்ள நபர்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றால் காப்பாற்றி விடலாம் என்று நான் கூறியதை போலீசார் விசாரணையின் போது கூறினேனா என்றால் இல்லை. இந்த வழக்கிற்கும் ஆஜர் எதிரிக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Oct 13, 2025 1:26 PM

Judicial Magistrate 2, Sattur.